தேதி - 05.04.2023 **Prob.O.P.No**.195/2021 ம.சா.1 (கலியுகராஜா)

1 முதல் 5 வரையுள்ள எதிர்மனுதாரர்கள் தோன்றாத் தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளனர்.

6 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை

நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். இளவர் மனுதாரர் ஹரீஷ் ஹயக்ரீவர் என்னுடைய மகன். மைனர் சௌமத்ரி என்னுடைய மகள் ஆவார். நான் நீதிமன்றத்தில் என்ன பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு 6 ம் எதிர்மனுதாரரான அரசு தரப்பில் பதிலுரை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்குத் தெரியும். நான் படித்து பார்த்தேன். 6 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்உரையை எதிர்த்து பதில்உரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தாயாரின் சகோதரி காயத்ரி என்பவர் எழுதி வைத்த உயில் சம்பந்தமாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.1 ஆன உயிலானது 6 ம் எதிர்மனுதாரரின் திருப்பரங்குன்றம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வீட்டில் வைத்து தயார் செய்யப்பட்டது. இறந்து போன காயத்ரி மருத்துவராக பணியாற்றி வந்தார். மருத்துவர் என்பதால் காயத்ரி ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வார் என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.1 ஆன உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து மருத்துவர் காயத்ரி என்பவருடைய கையெழுத்து என்பதை நிரூபிக்கும் வகையில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.1 ஆன உயில் ஆவணம் மருத்துவர் காயத்ரி என்பவரால் தயார் செய்யப்பட்டது என்பது குறித்தோ, யாரால் தயார் செய்யப்பட்டது என்பதை குறித்து முத்திரையோ அதில் இல்லை என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.1 ஆன உயில்ஆவணத்தை எழுதிய நபர் மருத்துவர் என்பதாலும், மருத்துவருக்கு உயில் ஆவணத்தை எவ்வாறு தயார் செய்ய வேண்டும என்ற விபரம் நன்கு தெரியும் என்றும், இறந்து போன மருத்துவர் காயத்ரி இறப்பிற்கு பின்னிட்டு ம.சா.ஆ.1 ஆன உயில்ஆவணம் மைனர் குழந்தைகளின் பெயரில் என்னை கார்டியனாக காண்பித்து பொய்யாக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.